PRANAV JOURNAL OF FINE ARTS
ISSN: 2582-9513

# மராட்டிய ஆட்சி கால கலாச்சார மாற்றங்கள்

ச.சுஜாதா & முனைவர் செ.கற்பகம்
இசைத்துறை (பரதநாட்டியம்)
தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்
மின்னஞ்சல்: sujassun@gmail.com

**ஆய்வுச்சுருக்கம்:**

தொன்றுதொட்டுவரும் கலைகளுள் சிறந்ததாக விளங்குவது ஆடற் கலையாகும். மன உணர்வுகளை வெளிப்படுத்த கை, கால், உடல் அசைவுகள் பயன்பட்டன. இவ்வசைவுகளை, கலை வடிவத்தோடு வெளிப்படுத்தும் போது புதிய பரிமானம் பெற்று வளர்ந்து செவ்வியல் நிலையை எய்துகின்றது. சங்க காலத்தில் ஆடற்கலைகளை நிகழ்த்தப் பொது மன்றங்கள் இருந்தன. பக்தி இசை, இலக்கியம், நடனம் ஆகியன திருக்கோயில்களில் பொலிவுடன் தோற்றம் பெற்றன. இக்காலத்தில் தெய்வீகத் தன்மையுடன் மேலும் விளக்கம் பெற்றன.

மன்னன், இறைவன் இவர்களின் குழந்தைக் கால நிகழ்வுகளைக் கவிஞன் தன் கற்பனைத் திறத்தால் பாடியது தான் பிள்ளைத் தமிழ் எனும் இலக்கிய வகை ஆயிற்று. மராட்டர் காலத்தில் நடன வடிவங்கள் பழமையின் அடிப்படையை நன்கு உள்வாங்கி பல புதிய நடன நாட்டிய நாடகங்களாக வளர்த்தன.

**திறவுச்சொற்கள்:** ஆடற்கலை, மராட்டியர்கள்,நாட்டிய நாடகம்,சரபோஜி,குறவஞ்சி நாடகம் தஞ்சை நால்வர்

**ஆய்வின் நோக்கம்**

பாரம்பரியம் மிக்க பரதக்கலையானது மிகவும் சிறப்பு வாய்ந்த பழைமையான ஆடற்கலையாகும். இக்கலையின் நுட்பங்களை ஒவ்வொருவரும் செம்மைப்படுத்தியபோது, மராட்டியர்கள் எவ்வாறு இச்செவ்விய நடனத்தில் கலாச்சார மாற்றங்கள் ஏற்பட தம் பங்களிப்பை நல்கினர் என விளக்குவதே இந்த ஆய்வின் நோக்கமாகும்.

**முன்னுரை:**

தஞ்சை நாயக்கர்களை அடுத்து தஞ்சை மண்ணை ஆளுவதற்காய் வந்தவர்கள் மராட்டியர்கள்.

தஞ்சை நாயக்கர்களின் கடைசி மன்னனாகிய செங்கமலதாஸ் தனது ஆட்சியை மதுரை நாயக்கர்களிடம் இருந்து காப்பாற்றிக் கொள்ள பீஜப்பூர் சுல்தானின் உதவியை நாடினார். பீஜப்பூர் சுல்தான் தனது தளபதி ஏகோஜி எனும் மராட்டியர் தலைமையில் படைகளை அனுப்பி உதவினார்.

படைத் தளபதியாய் வந்த ஏகோஜி மதுரை நாயக்கர்களை வென்று கி.பி. 1674 இல் செங்கமலதாஸிடம் ஒப்படைத்தார். ஆயினும், தஞ்சையில் ஏற்பட்ட உட்பூசல் குழப்பங்களின் காரணமாக நிலையான ஆட்சியை செங்கமலதாஸ் தர இயலாது போக

PRANAV JOURNAL OF FINE ARTS
ISSN: 2582-9513

ஆட்சி ஏகோஜியின் கையில் கி.பி. 1676இல் ஒப்படைக்கப்பட்டது. அதுவே தஞ்சையை ஆளும் மன்னர்களாக மராட்டியர்களை மாறச் செய்தது.

கி.பி. 1676இல் ஏகோஜி ஆட்சிப் பொறுப்பினை ஏற்றார். அவரைத் தொடர்ந்து 1684இல் ஷாஹாஜியும் மன்னராகப் பொறுப்பேற்றார்.

தஞ்சையை ஆண்ட மராத்திய மன்னர்களின் ஆட்சிக் காலத்தைக் கீழ்வருமாறு அட்டவணைப் படுத்தலாம்.

1. வெண்கோஜி எனும் ஏகோஜி : கி.பி. 1676 – 1684
2. சகாஜி : கி.பி. 1684 – 1712
3. சரபோஜி : கி.பி. 1712 – 1729
4. துக்காஜி : கி.பி. 1728 – 1736
5. ஏகோஜி II : கி.பி. 1736 – 1737
6. சயாஜி : கி.பி. 1788
7. பிரதாப் சிங் : கி.பி. 1739 – 1763
8. துல்ஜா II : கி.பி. 1763 – 1787
9. அமர்சிங் : கி.பி. 1787 – 1796
10. சரபோஜி II : கி.பி. 1796 - 1832
11. சிவாஜி II : கி.பி. 1832 – 1855

இவ்வாறு அமைந்துள்ள மராட்டிய மன்னர்கள் ஒவ்வொருவரும் கலை, இலக்கியம் இவைகளுக்குத் தங்களால் இயன்ற பங்களிப்பைத் தந்துள்ளனர்.

இரண்டாம் சஹாஜி இசை, வடமொழி எனும் இரண்டிலும் ஆற்றல் வாய்ந்தவர். இவர் எழுதிய சந்திரசேகர விலாசம், சப்தார்த்த சமன்வயம், சப்தார்த்த சங்ரஹ சிருங்கார மஞ்சரி ஆகியவை இவரது படைப்பாற்றலை வெளிப்படுத்துகின்றன. மேலும், தெலுங்கு எழுத்தில் விஷ்ணு சஹாராஜ விலாசம் எனும் தமிழ் நூலையும் இயற்றியவர் இவர் என்று தெரிகின்றது.

முதலாம் சரபோஜி கற்றறிந்த அறிஞர்களுக்கென சரபோஜி ராஜபுரம் எனும் சிற்றூரைத் தானமாக வழங்கியவர்.

முதலாம் துளஜா சங்கீத சாராமிருதம் எனும் இசை நூலையும், சிவகாம சுந்தரி பரிணயம் எனும் தெலுங்கு மொழி நாட்டிய நாடகத்தையும், ராஜரஞ்சன வித்யா விலாச நாடகத்தை வடமொழியிலும் எழுதியுள்ளார்.

இரண்டாம் ஏகோஜி நீதிபதம், சருங்காரபதம், மராத்திபதம், கீர்த்தனைகள் எழுதியவர்.

ISSN: 2582-9513

பிரதாபசிம்மன் புராணங்களைக் கொண்டு பன்னிரண்டு நாடகங்களை எழுதியவர். வடக்கில் தரானா என்ற புகழ் பெற்ற இசை வடிவம் தில்லான எனும் பெயரில் புகழ் அடைந்தது.

இரண்டாம் துளஜா வீணை வாசிப்பதில் திறமையானவர். நடனத்தினுக்குப் பல சிறப்புகளைத் தந்தவர்.

அமர்சிங் மராத்திய மொழியில் நாடகங்களும் பாடல்களும் புனைந்தவர்.

இரண்டாம் சரபோஜி சரஸ்வதி மகால் எனும் நூலகத்தை உருவாக்கினார். இன்றளவும் அந்நூலகம் பல கலைகளின் ஊற்றாய் இருந்து வருகின்றது.

இரண்டாம் சிவாஜி தமிழ் இலக்கிய வளர்ச்சிக்குப் பாடுபட்டவர்.

இவ்வாறு மராட்டிய மன்னர்கள் அனைவரும் கல்வி, கலை போன்றவைகளில் சிறந்து விளங்கியமையால் நடனக் கலையும் இவர்களது காலத்தில் புது வடிவம் பெற்றுப் பொலிந்தது. அதை இனி விரிவாகப் பார்ப்போம்.

**மராட்டியர் காலத்தில் உருவாக்கப்பட்ட நாட்டிய நாடகங்கள்:**

சஹாஜியின் காலத்தில் கேய நாடகம் எனும் இசை நாட்டிய நாடகம் புதியதாகவும் புதுமையாகவும் உருவாக்கம் பெற்றது. இந்நாட்டிய நாடகத்தில் இசை, நாட்டியம், நாடகம் எனும் மூன்றும் சமச்சீராக இணைந்து ஒரு புதிய பரிமாணத்தைப் பெற்றது.

யட்சகானம் எனும் நாட்டிய வடிவையும் பிரபந்த வகை இலக்கியங்களையும் ஒருங்கிணைத்துப் புதிய வகை நாட்டிய நாடகத்தை உருவாக்கினார்.

விஷ்ணு பல்லக்கி சேவா எனும் நாட்டிய நாடகத்தில் இனிய ஓசையுடன் பாடல்களைப் பாடிக் கொண்டே நடனம் ஆடிக் கொண்டு இறைவனின் பல்லக்கைத் தூக்கி வருவதை அழகுடன் வெளிப்படுத்தியுள்ளார்.

விஷ்ணு பல்லக்கி சேவையினை அடுத்து, இரண்டு பெண்கள், நட்டுவனார் ஒருவர், குறவர் ஒருவர், பணியாள் ஒருவர் என ஐந்து நபர்கள் ஒன்றிணைந்து இசைக்கு அவரவர் தன்மைக்கு ஏற்றாற்போல் தாள லயம் விலகாது நடனம் ஆடுவதை விவரிக்கின்றது பஞ்சரத்தினம் எனும் நாட்டிய நாடக நூல், இந்நூலில் வேறுபட்ட பல தாளக் கோர்வைகளும், அழகான ஜதிகளும் திறம்பட அமைக்கப்பட்டுள்ளன.

**நடன அடவுகளை வடிவமைக்கப்பட்ட காலம்:**

புதிய கோர்வைகள், ஜதிகள், கணபதி கௌத்துவம், தரு போன்றன ஓசை, தாள நயங்களுக்கு ஏற்ப அமைக்கப்பட்டிருப்பது இந்நடன நாட்டிய நாடக நூலின் சிறப்பாகும்.

வடமொழி, தெலுங்கு, மராட்டி, தமிழ் என நான்கு மொழிகளால் இயற்றப்பட்ட நாட்டிய நாடகம் விநோத சித்திர பிரபந்தம் எனும் நூல். இந்நூலுள் இறை முன்பு ஆடும் தேவ நடனம், மன்னர் முன் ஆடும் ராஜ நடனம், மக்கள் முன் ஆடும் தேசி நடனம் எனும் மூன்றில் எது சிறந்தது என சிவபெருமானும் காளியும் விவாதம் செய்து இறுதியில் தேசி நடனமே சிறந்தது என முடிவு செய்து இருவரும் தேசி நடனத்தை ஆடுவதாக இந்நூல் அமைக்கப்பட்டிருக்கின்றது.

PRANAV JOURNAL OF FINE ARTS
ISSN: 2582-9513

சரபோஜி மன்னர் நிரூபணம் எனும் நாட்டிய வகையைத் தோற்றுவித்தார். கதையின் கருவை விரிவாக விளக்கி உரைப்பதே நிரூபணம்.

இந்நாட்டியத்தில் ஜெயஜெய, சரணு, அலரு, சொல்லு, சப்தம், வர்ணம், பதம், ஸ்வரஜதி, அபிநய பதம், தில்லானா, அர்ஜிதபதம், ஜக்கினி, கீதம், பிரபந்தம், திரிபதம், ஸ்லோக வர்ணம், கௌத்துவம், மங்களம் எனும் பதினெட்டு உறுப்புகள் இடம்பெறும். இதன் முன்னோடி மராட்டியில் உள்ள கீர்த்தன் என்பதாகும். இப்பதினெட்டும் ஒரே ராகத்தில் ஒரே தாளத்தில் அமைக்கப்படுதலே இதன் சிறப்பாகும்.

இவ்வகை நடனம் இறை வாழ்த்துடன் தொடங்கி மங்களம் எனும் மக்கள் வாழ்த்துடன் முடியும். பல்வேறு பாத்திரங்களின் வேறுபட்ட உணர்வுகளையும், மனநிலைகளையும் சிறப்பாக வெளிக் கொணரும் தனிநபர் நாட்டியங்களாகவே படைக்கப்பட்டுள்ளது.

மேலும் சரபோஜி எழுதிய நிரூபணம் எனும் இலக்கிய வகையைச் சற்று ஆய்ந்தால் ஓர் உண்மை புலப்படும். நிரூபணம் 18 விதமான பாடல் வடிவங்களை அஃதாவது நடனத்தினுக்குரிய அளவில் கொண்டிருக்கும் என்பதே. தமிழில் கலம்பகம் எனும் ஓர் இலக்கிய வகை உண்டு. அவ்விலக்கியம் பதினெட்டு வகை உறுப்புகளை உடையது. கலம்பகத்தின் உறுப்புகளைப் போலவே நிரூபணம் எனும்; இலக்கிய வகை உள்ளதால் இதனையும் கலம்பகத்தையும் ஒப்புநோக்கி ஆய்தல் வேண்டும். அது எவ்வாறாயினும் சரபோஜியின் படைப்பில் உருவான நிரூபணம் பிற்காலத்தில் தோன்றிய நடன மார்க்கத்தின் உருப்படிகளைப் பெற்றருப்பதால் இந்நிரூபணமே மார்க்கத்தின் அடிப்படையாக இருந்திருக்க வேண்டும்.

சரபோஜியின் காலத்தில் அவரால் படைக்கப்பட்ட மற்றொரு இசை நடன நாடக வடிவம் குறவஞ்சி ஆகும். மன்னர் சரபோஜியே தேவேந்திர குறவஞ்சியையும், திரிஸ்தல தீர்த்த யாத்திரை எனும் லாவணியும் இயற்றியுள்ளார்.

மராட்டர் காலத்தில் நடன வடிவங்கள் பழமையின் அடிப்படையை நன்கு உள்வாங்கி பல புதிய நடன நாட்டிய நாடகங்களாக வளர்ந்தன.

மன்னர்களின் அரசவையில் நிகழ்ந்துவதற்கென்றே சில உருப்படிகளை மராட்டியர்கள் செய்து வைத்திருந்தனர். எந்த ஒரு கலைக்கும் இரு வகையான செயல்பாடுகள் உண்டு. ஒன்று அறிவினைத் தருதல்; மற்றொன்று மகிழ்ச்சியினைத் தருவது.

**மராட்டியர்கள் உருவாக்கிய குறவஞ்சி வகை நாடகங்கள்:**

மராட்டியர்கள் உருவாக்கிய மற்றொரு வகையான நாட்டிய நாடகம் யட்சகானம் எனும் ஒன்று. இலக்கியத் தரம், இசையின் செல்வாக்கு, நடனத்தின் சிறப்பு எனும் மூன்றின் கலவையாக சிருங்கார ரஸத்தை மையமாகக் கொண்டு ஆடப்படுவதே யட்சகானம் எனும் நாட்டிய நாடகம். சந்திரசேகர விலாச நாடகம் என்பது சிறந்த யட்சகான நாடகமாகும். இந்நாடகம் கீதகோவிந்தத்தின் அடிப்படையில் தோன்றியதாக இருக்கும் என்று அறிஞர்கள் கருதுகின்றனர்.

மராட்டியர்கள் கவனம் செலுத்திய பிறிது ஒரு நடன நாடகம் குறவஞ்சி என்கின்ற தேசி வகை நாட்டிய நாடகமாகும். 18, 19ஆம் நூற்றாண்டுகளில் நூற்றுக்கும் மேற்பட்ட குறவஞ்சி நாடகங்கள் இயற்றப்பட்டன. இயல், இசை, நாடகம் எனும் முத்தமிழால் சொற்களினைக் கொண்டு பாடல் புனையப்பட்டும், பாமர மக்களுக்குப் பக்தி, இறை வழிபாடு போன்றவைகளை உருவாக்கித் தருவதற்கும் என இத்தகைய நாடகங்கள் எழுதப்பட்டன.

சஹாஜி ராஜ குறவஞ்சி, தியாகேச குறவஞ்சி, வெள்ளைப் பிள்ளையார் குறவஞ்சி, குற்றாலக் குறவஞ்சி போன்றன சிறந்த குறவஞ்சிகளாகும்.

குறவஞ்சி நாடகத்தில் இறைவன் மீதுள்ள பக்தி எனும் காதலும் மக்கள் மீது எழும் மனிதக் காதலின் கலவையாக இருப்பதே குறவஞ்சி இலக்கிய வடிவமாகும். தொடக்க காலத்தில் எழுதப்பட்ட குறவஞ்சிக்கும் பின்னர் எழுந்த குறவஞ்சிக்கும் இடையே பல வேறுபாடுகள் உண்டு எனினும் அடிப்படையான இறை உணர்வுகள் மாற்றம் பெறவில்லை.

**பாகவத மேளா நாடகம்:**

கோயில் உட்பிரகாரங்களில் மட்டுமே நடிக்கப்படக் கூடிய நாட்டிய நாடகம் பாகவத மேளா எனும் ஒரு நடன வகை இலக்கியமாகும். காலத்தினுக்கேற்ப மாற்றங்களை இப்பாகவத மேளா பெற்றுவிடக் கூடாது என்பதைக் கருத்தில் கொண்டு மிக கவனத்துடன் உருவாக்கப்பட்டவைகளே பாகவத மேளம் எனும் நாட்டிய நாடகம். நிருத்த, நிருத்திய, நாட்டிய பண்பினை உள்ளடக்கியது இந்நாடகம். இவ்வகை நாட்டிய நாடகங்கள் இன்றுவரை நரசிம்ம ஜெயந்தி விழாவில் நடிக்கப்பட்டு வருகின்றன.

நாட்டிய நாடகங்களின் வேறுபட்ட பல வடிவங்களை மராட்டியர்கள் தந்துள்ளனர். மன்னனின் ஆற்றலைப் புகழைப் புகழ்ந்து பாடி ஆடும் நாடகங்கள் மன்னனின் அரண்மனையில் அமைந்துள்ள நிருத்த மண்டபங்களில் ஆடிப் பாடி நடிக்கப்பட்டன.

வாவணி எனும் குழு வகை நாட்டிய நாடகத்தினையும் மராட்டியர்கள் உருவாக்கினர். குழுவின் தலைவனாக இருப்பவன் ஆசுகவி பாடும் வல்லமை பொருந்தியவராக இருக்க வேண்டும். சிருங்கார லாவணி, நோட் லாவணி, சம்பத் சாரா லாவணி, பரகதி லாவணி, வேதாந்த லாவணி போன்றன சில லாவணிகளாகும்.

இன்றைய பரத நாட்டியக் கலைஞர்கள் நிகழ்த்தும் பரத நிகழ்ச்சிகள் அனைத்தையும் உள்ளடக்கி முழுமையானதொரு விளக்கத்தை சரபோஜி மன்னர் ஆக்கிய நடன நூல்களில் காண இயலுகின்றது. சரபோஜியின் நடன வகைகளே இக்காலத்தில் வழங்கி வரும் மார்கி எனும் வடிவத்தின் முன்னோடியாக இருக்க வாய்ப்புகள் பல உண்டு.

மேலும் சரபோஜி நடனத்தின் உள்ளீடுகளுக்குச் சில வழிமுறைகளை வகுத்தளித்தார். அவை:

இராகத்தின் ஸ்வரங்கள், தாளத்தின் ஜதிகள் எனும் இரண்டையும் இணைத்து உருவாக்கப்பட்ட இசையமைப்பாகும். 18ஆம் நூற்றாண்டில் மெலட்டூர் பாகவத மேளா கலைஞரான வீரபத்திரய்யா முதன் முதலில் ஸ்வர ஜதி எனும் ஒன்றை உருவாக்கினார்.

ISSN: 2582-9513

நாட்டிய ஸ்வரஜதி, இசை ஸ்வரஜதி, அப்பியாச கானம் எனும் மூன்று வகையாக உருவாக்கப்பட்டன.

ஜதிகளுக்கேற்ற சரணங்களும் சாகித்தியத்தின் தன்மைக்கேற்ப ஸ்வரஜதிகளையும் உருவாக்கி உயர்ந்ததோர் நாட்டிய நிகழ்வுகளை உருவாக்கினர்.

இக்காலத்தில் நடன மேடைகளில் பெரிதும் போற்றப்படும் பதவர்ணம் கி.பி. 18ஆம் நூற்றாண்டில் நாட்டிய வடிவமாக்கப்பட்டது.

முழுமையான வர்ணம், சாகித்யகளைக் கொண்டு சொற்கள், ஸ்வரங்கள், சொல்லுக்கட்டு எனப்படும் ஜதிகள் போன்றவைகளைக் கொண்டு உருவானதே பதவர்ணம்.

பல்லவி, அனுபல்லவி இவைகளுக்கிடையே ஐந்து நடைகளில் பயின்றுவரும் சொல்லுக் கட்டுகள் அமைக்கப்படும்.

குறைந்தபட்சம் நான்கு ஆவர்த்தனங்களுக்குப் பொருந்தும் வகையில் அனுபல்லவி அமைக்கப்படும்.

அனுபல்லவியைத் தொடர்ந்து பொருள் பொதிந்த பாடல்களான சாகித்யம், சாகித்யத்துடன் இணைந்த சிட்டைஸ்வரம் தொகுக்கப்பட்டு நடனம் அமைக்கப்படும்.

**சிறந்த நட்டுவனார்கள்:**

மராட்டியர்களின் காலத்தில் நடனத்திற்கு ஒரு சிறந்த தகுதியைப் பெற்றுத் தந்தவர்கள் ‘தஞ்சை நால்வர்’ என்று இன்று வரை நடன, இசை மாந்தர்களால் அழைக்கப்படும்,

சின்னையா கி.பி. 1802

பொன்னையா கி.பி. 1804

சிவானந்தம் கி.பி. 1808

வடிவேலு கி.பி. 1810

எனும் நான்கு சகோதர்களே ஆவர்.

இந்நால்வரும் மன்னார்குடியைச் சார்ந்த சுப்புராய நட்டுவனாரின் மக்கள் ஆவர். இந்நால்வரும் திரு முத்துசாமி தீட்சிதரிடம் இசை பயின்றார்கள். தஞ்சை, திருவாங்கூர் எனும் அரச சபைகளில் அரசு இசைக் கலைஞர்களாக இருந்தவர்கள்.

சரபேந்திர பூபால குறவஞ்சி இலக்கியத்தை தஞ்சை பெரிய கோயிலில் முறையாக இசைவடிவம் தந்து அரங்கேறச் செய்தவர்கள்.

இந்நால்வரும் நடனத்தின் தேவை கருதி பல புதிய அலாரிப்பு, ஜதிஸ்வரம், சப்தம், வர்ணம், பதம், தில்லானா, தரு, கவுத்துவம் என்பவைகளை உருவாக்கி இசைப்படுத்தி நடன மாந்தர்களுக்குக் கற்றுத் தந்தனர். இந்நால்வரும் இன்றைய நடனத்தின் மார்கம் எனும் பகுதிக்கு உரிய வடிவத்தைத் தந்தனர்.

தஞ்சை நால்வரில், பொன்னையா கர்நாடக இசைக்குத் தேவையான ஆரம்பப் பாடமாக இருக்கின்ற சரளி, ஜண்டை, அலங்காரம் போன்றதொரு பாடத் திட்டமும் முறையும் தேவை என்பது கருதி நடனத்தின் அடிப்படையாக அடவுகளை வகுத்துக்

ISSN: 2582-9513

கொடுத்தார். பொன்னையாப் பிள்ளை வகுத்தளித்த அடவுகள் 1) தட்டு அடைவு, 2. நாட்டு அடைவு, 3. குதித்து அடைவு, 4) ஜாதி அடைவு, 5) தட்டு மெட்டு அடைவு, 6) மெய் அடைவு, 7) அறுதி அடைவு, 8) மெட்டு அடைவு, 9) நடை அடைவு, 10) முடிவு அடைவ எனும் பத்து அடைவ முறைகளைத் தந்துதவினார். இவை ஒவ்வொன்றும் 12 அடைவுகளாக விரிவடைந்து மொத்தம் 120 அடைவுகளாக விவரித்துள்ளார். இவ்வடைவுகளே இன்று வரை நடன மாந்தர்களால் பின்பற்றப்பட்டு வருகின்றன.

பின்னர் பொன்னையா அவர்கள் நடனத்தை மேடையில் நிகழ்த்த தேவையான வடிவம் என,

அலாரிப்பு, ஜதிஸ்வரம், சப்தம், பதவர்ணம், சுரஜதி, பதம், இராகமாலிகை, சுலோகம், தில்லானா எனும் வரிசையில் நடன நிகழ்வுகள் அமைய வேண்டும் என்று அட்டவணைப் படுத்தித் தந்தார். இன்றுவரை இம்முறையே அரங்கேற்றத்தில் பின்பற்றப்படுகின்றது.

பொன்னையா அவர்கள் தாம் வகுத்த நடன அமைப்பினுக்குத் தேவையான பல பாடல்களையும் புனைந்து இசை அமைத்துத் தந்துள்ளார். அவைகளுள்,

‘அதிமோகமானேன்’ எனும் பதவர்ணம்,

‘சலமேல’ எனும் வர்ணம்,

‘சகியே இந்தவேளையில்’ எனும் பதவர்ணம்,

‘மோகமானேன்’ எனும் வர்ணம்,

‘ஏமாயலாடிரா’ எனும் சுர ஜதியும்,

காபி, கமாஸ் இந்தோள ராகங்களில் அமைந்த தில்லானாக்களையும் சிறப்பாகக் குறிப்பிடலாம்.

சின்னையா அவர்கள் மைசூர் அரண்மனைக் கலைஞராகப் பணியாற்றினார். அவர் பல பதவர்ணங்கள், கீர்த்தனைகள், ஜாவளிகள் இயற்றினார். தமக்கு ஆதரவு நல்கிய மைசூர் சாமராஜேந்திர மன்னன் மீது ‘ஏமகோ போதிஞ்ரா’ எனும் பதவர்ணத்தை இயற்றினார்.

சிவானந்தம் அவர்கள் கோயில்களில் நடனக் கலையை ஒரு பக்தி வழிபாட்டின் வெளிப்பாடாக மாற்றினார். கோயில்களில் இறைவனுக்குரிய சோடசோபசாரம், தீப ஆராதனை, தாள ஜதிகள், நிருத்தியம் போன்றவற்றினுக்கு நிருத்திய நியதிகளை உண்டாக்கினார்.

கோயில்களில் விழாக் காலங்களில் செய்யப்படும் நவசந்திக்கு ஸதிகளோடு தாளம் தட்டப்பட வேண்டிய முறைகளை வகுத்தளித்தார். பெண்களுக்கு இணையாக நாட்டியத்தை ஆண்களும் ஆட இயலும் என்பதை சுப்பையா பண்டாரம் என்பவருக்கு நடனத்தைக் கற்பித்தவரும் இவரே ஆவார்.

வடிவேலு, நால்வரில் கடைசியாய் இருப்பவர். இவர் மேனாட்டு இசைக்; கருவியான வயலினைக் தமிழ் கர்நாடக இசைக்கு முதன் முதலில் பயன்படுத்திக் காண்பித்தவர்.

PRANAV JOURNAL OF FINE ARTS
ISSN: 2582-9513

குறவஞ்சியில் உள்ள மோகினியின் பந்தாட்ட முறையினைக் கொண்டு திருவிதாங்கூரில் பெண்களே நடனம் செய்வதற்குரிய மோகினி ஆட்டத்தினை உருவாக்கித் தந்தார்.

இந்நால்வரில் சிவானந்தத்தின் மக்களான சபாபதி, மகாதேவன் எனும் இருவரும் நடனக் கலை வல்லவராய் ஆசிரியர்களாய்த் திகழ்ந்தனர்.

சபாபதிக்கு மகனும் மகாதேவனுக்கு மகளும் இருந்தனர். மகாதேவனின் மகளைப் பந்தணைநல்லூர் மீனாட்சி சுந்தரம் பிள்ளை மணந்தார். தஞ்சை நால்வரின் நாட்டிய முறை மீனாட்சி சுந்தரம் பிள்ளையால் பேணப்பட்டு பின்னர் 'பந்தணைநல்லூர் முறை' என வளர்ந்தது.

மீனாட்சி சுந்தரம் பிள்ளை தஞ்சையிலேயே பொன்னையா நாட்டியக் கல்லூரியை 1951இல் நிறுவினார். இன்றுவரை அக்கல்லூரி கலைச் சேவையைத் தொடர்ந்து செய்து வருகின்றது.

கங்கமுத்துப் பிள்ளையின் ஆறாவது தலைமுறையாகப் பொன்னயாபிள்ளை மிகச் சிறந்த நடன ஆசானாகத் திகழ்ந்தார். இவர் மக்கள் கிட்டப்பா பிள்ளை, சிவானந்தம் பிள்ளை என்பவர் ஆவர்.

கிட்டப்பா பிள்ளை மிகச் சிறந்த நடன வல்லுனராயும் ஆசிரியராயும் திகழ்ந்தார்.

சிவானந்தம் மிகச் சிறந்த வீணைக் கலைஞர் ஆவார்.

தஞ்சை நால்வரால் உருவாக்கப்பட்ட நடன மார்கம் பின்னர் தஞ்சை வழி, வழுவூர் வழி, பந்தணைநல்லூர் வழி என மாற்றம் பெற்று இம்மூன்று வழிகளிலும் இன்றளவும் பல நடன வல்லுனர்கள் நடனமாடி வருகின்றனர்.

**முடிவுரை:**

நாயக்கர்களைக் காட்டிலும் மராட்டியர்கள் கலைகளின் மீது அதிக ஆர்வம் காட்டினர். மராட்டிய மன்னர் அனைவரும் இசை நடனங்களுக்குத் தங்கள் பங்களிப்பை படைப்பியல் இலக்கியங்களாகத் தந்துள்ளனர். வடமொழி, மராட்டிய மொழி, கன்னடம், தெலுங்கு, தமிழ் ஆகிய மொழிகளில் நடன உருப்படிகள் படைக்கப்பட்டன. பதம், பதவர்ணம், தில்லானா, ஜாவளி போன்றன உருவாக்கப்பட்டது. நடனத்திற்கென்றே தஞ்சை நால்வர் பணியாற்றினர். நடனத்தைக் கற்கத் தேவையான அடைவுகள் தொகுக்கப்பட்டு பின் செயல்பாடுகளின் நோக்கில் வகுக்கப்பட்டன. நடனத்தினைச் செய்யத் தேவையான 'மார்கம்' எனும் வடிவம் உருவாக்கப்பட்டது. கோவில் நடனங்கள் முறைப்படுத்தப்பட்டன. மேற்கத்திய இசைக் கருவி வயலின் கர்நாடக இசைக்குப் பயன்படுத்தப்பட்டது. மோகினி ஆட்டம் உருவாக்கப்பட்டது. தஞ்சை நடனப் பாணியே பல ஊர்களில் தழைத்துப் பின் அவ்அவ் ஊர்களின் பெயர்களாக மாற்றம் பெற்றது.

ISSN: 2582-9513

**துணை நின்ற நூல்களின் பட்டியல்**


1. முதுமுனைவர் மா.ச.அறிவுடைநம்பி, தஞ்சை மராட்டியர் வளர்த்த தமிழ் இலக்கியம், தமிழ்ப்பல்கலைக்கழகம், தஞ்சாவூர்,2004

2. வே.கோபாலன், தஞ்சை மராட்டியர் வரலாறு,தஞ்சை,2000

3. முனைவர் ஞானாம்பிகை தேவி குலேந்திரன், தஞ்சை நால்வர் வழி நாட்டிய இசை மரபு, தமிழ்ப்பல்கலைக்கழகம், தஞ்சாவூர் ,2005

4. முனைவர் சே. இரகுராமன், தமிழர் நடன வரலாறு ஸ்ரீமுத்ராலயா,சென்னை,2014 .

5.தஞ்சை நால்வரின் நாட்டிய இசை (பிரசுரிக்கப்படாத அரிய உருப்படிகள்) ,ஸங்கீத வித்வத் சபை, சென்னை,1999.